# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 05 புதன்கிழமை 22.10.2025 கதிர் 347







# வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர சுட்டுக்கொலை!



**மாத்தறை, ஒக். 22**

**"மிதிகம லசா" என அழைக கப்படும் வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர ஹேவத் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட தில் அவர் உயிரிழந்துள்ளார்.**

**இந்தச் சம்பவம் இன்று புதன்கிழமை முற்பகல் இடம் பெற்றுள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான "மிதிகம லசா" வெலிகம பிரதேச சபை அலுவலகத்தில்இருக்கும்போதுமோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர், அவர்மீதுதுப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் படுகாய மடைந்த "மிதிகம லசா" சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர்மிதிகமபிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இதுதான் தேசியப் பாதுகாப்பா? எதிர்க்கட்சியினர் கூச்சல்

கொழும்பு, ஒக் .22

வெலிகம பிரதேச சபைத் தலைவர், சபைக்குள் இருக்கும்போதே அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். தேசியப் பாதுகாப்பு இதுதானா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

இன்று நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

சற்று நேரத்துக்கு முன்னர் வெலிகம பிரதேச சபையின் தலைவர் லசந்த விக்ரமசேகர சபைக்குள் தனது கடமைகளை முன்னெடுத்து வரும் வேளையில், அவர் மீது துப்பாக்கிச் சூடு நடந்தப்பட்டுள்ளது.

தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்தபோது நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச சபைத் தலைவர் என்பவர் மக்கள் 7➤



## மன்னார் விபத்தில் ஒருவர் பலி 10 பேர் காயம்



மன்னார், ஒக் .22

மன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் புதன்கிழமை22) காலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் 29 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், பத்து பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கி பயணித்த தனியார் பேருந்து, 35ஆவது கிலோ மீற்றர் மற்றும் 36ஆவது கிலோ மீற்றர் மைல்கல்களுக்கு இடையில் வாகனத்தின் கட்டுப்பாட்டை 7➤

## கெஹெல்பத்தர பத்மேவின் 50 மில்லியன் சொத்துக்கள் பறிமுதல்



கொழும்பு, ஒக் .22

பாதாள உலகக்குழு தலைவர் கெஹெல்பத்தர பத்மேவினால் சட்டவிரோதமாக சம்பாதிக் கப்பட்ட ரூபாய் 50 மில்லியன் மதிப்புள்ள சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வு பிரிவினரால் இன்று இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட டுள்ளது.

கெஹெல்பத்தர 7➤

## குறிகட்டுவான் இறங்குதுறையை புனரமைக்க அங்கிகாரம்

நயினாதீவு, ஒக் .22

நயினாதீவு மற்றும் நெடுந்தீவு போன்ற இரண்டு தீவுகளுக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் இணைக்கும் பிரதான சமுத்திர அணுகல் வழியாக குறிகட்டுவான் இறங்குதுறை பயன்படுத்தப்படுகின்றது.

இவ் இறங்குதுறை மூலம் குறித்த தீவுகளுக்கு பயணம் செய்கின்ற பயணிகள் மற்றும் பண்டங்கள் போக்குவரத்து படகுச் சேவைகளுக்கான வசதிகள் வழங்கப்படுவதுடன், சமூக ரீதியாக, சமய ரீதியாக மற்றும் நிர்வாக ரீதியாக பரந்துபட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது காணப்படுகின்ற இறங்குதுறை 7➤



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ஆயுர்வேத மசாஜ் நிலையங்களை சட்டப்பூர்வமாக்கக் கோரி மனு

கொழும்பு, ஒக் .22

ஆயுர்வேத மசாஜ் சிகிச்சை நிலையங்களை சட்டப்பூர்வமாக்குவதற்கான சட்டமூலத்தை விரைவாக தயாரிக்க நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிடக் கோரி இலங்கை மசாஜ் நிலைய உரிமையாளர்கள் சங்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளது.

அதில் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் ஆயுர்வேத ஆணையர் நாயகம் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர்கள் தாங்கள் உரிமம் பெற்ற ஆயுர்வேத மசாஜ் (ஸ்பா) நிறுவனங்களைக் கொண்ட ஒரு சங்கம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

தாங்கள் நடத்தும் ஒவ்வொரு மசாஜ் நிலையங்களிலும் தகுதிவாய்ந்த ஆயுர்வேத மருத்துவர் மற்றும் தகுதிவாய்ந்த சிகிச்சையாளர்கள் இருப்பதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆண்டுக்கு பின்னர் இத்தகைய மசாஜ் நிறுவனங்களை நடத்துவதற்கான உரிமங்களை வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக, இடையூறு இல்லாமல் தங்கள் பணியைத் தொடர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, பொலிஸார் அவ்வப்போது தங்கள் மசாஜ் நிலையங்களில் சோதனை நடத்தி தலையிட்டு வருவதாகவும், இதனால் தங்கள் தொழிலை சுதந்திரமாகத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும், இதுபோன்ற மசாஜ் நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டமூலத்தை தயாரிக்க அரசாங்கம் தயாராகி வருவதாக தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதன்படி, குறித்த சட்டமூலத்தை உடனடியாக தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க சட்டமா அதிபருக்கு உத்தரவிடுமாறு மனுதாரர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# இறக்குமதி அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம்

கொழும்பு, ஒக் .22

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விலை நிர்ணயம் அதன் தலைவரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பச்சை அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை ரூ. 210 ஆகவும், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் நாட்டு அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை ரூ. 220 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் சம்பா அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை ரூ. 230 ஆகவும், ஒரு கிலோ கிராம் பொன்னி சம்பாவின் அதிகபட்ச விலை ரூ. 240 ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவிப்பில் ஒரு கிலோ கிராம் கீரி பொன்னி சம்பாவின் அதிகபட்ச சில்லறை விலை ரூ. 255 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பில், இந்த விலை திருத்தங்கள் நேற்று (21) முதல் அமுலுக்கு வந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# கொழும்பு – மகாநாம கல்லூரியில் மூன்று சிறுவர்கள் துஷ்பிரயோகம் –சபையில் சஜித் சுட்டிக்காட்டு!

கொழும்பு மகாநாம கல்லூரியில் கற்கும் மூன்று சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் இன்று இடம்பெற்ற அமர்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு மகாநாம கல்லூரியில் குறித்த பாடசாலைக்கு பொறுப்பான தலைமைப் பாதுகாப்பு அதிகாரியால் கடந்த 4 ஆம் திகதி மூன்று சிறுவர்கள் கடுமையான பாலியல் துஷ்பிர யோகத்துக்கு உள்ளாகியுள்ளனர். துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பிள்ளைகள் குறித்து அதிபரோ அல்லது ஆசிரியர்களோ எந்தத் தெளிவானதொரு நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை.

மருத்துவர்களிடம் அனுப்பும் நடவடிக்கையோ, தொடர்புடைய பாதுகாப்பு நிறுவனம் குறித்தோ அல்லது இந்த துஷ்பிரயோகத்தைச் செய்த குற்றவாளிக்கு எதிராகவோ எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

இரு ஆசிரியர்கள் இது தொடர்பில் அதிபரோடு பேசும்போது அதிபர் குறித்த இரு ஆசிரியர்களையும் மிரட்டியுள்ளார். இது குறித்து முறைப்பாடு பதிவு செய்ய முற்படும் போது, நீதிமன்றங்கள் தோறும் அழைத்துச் செல்ல வேண்டி வரும் என்றும், பல ஆண்டுகளாக வழக்குகள் இழுத்தடிக்கப்படலாம் என்றும் பெற்றோர்களை பயமுறுத்தியுள்ளார். பாடசாலை முன்பாக போராட்டமொன்றை முன்னெடுப்பதற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து முறையான விசாரணையை நடத்தி, குறித்த பிள்ளைகளுக்கு பாதுகாப்பை பெற்றுக் கொடுக்குமாறும், இந்த விடயம் குறித்து ஆராய்ந்து பார்க்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றேன். குற்றவாளி மீது சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த செல்வாக்குக்கும் அடிபணியாமல் விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)



# வாக்களித்தும் அரசாங்கம் எம்மை கண்டுகொள்ளவில்லை அகில இலங்கை பட்டதாரிகள் ஒன்றியத்தின் தலைவர்!

ஒரு மாற்றத்தை எதிர்நோக்கியே இந்த அரசாங்கத்தை நாங்களும் வாக்களித்து கொண்டு வந்திருந்தோம். இந்த அரசாங்க கடந்தகாலத்தில் தாங்கள் ஆட்சியில் இல்லாத போது எமது பிரச்சினைக்கு அவர்களும் ஆதரவு வழங்கி எங்களுடன் இணைந்து கல்வி அமைச்சின் முன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், எங்களை ஊக்குவித்தவர்கள். ஆனால் அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் எங்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பது ஒரு வேடிக்கையானதாக இருக்கின்றது என அகில இலங்கை பட்டதாரிகள் ஒன்றியத்தின் தலைவர் கணேசன் அனிரன் தெரிவித்தார்.




மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த ஐந்து வருடங்களாக பாடசாலைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைக்கப்பட்டு ஆசிரியர்களாகக் கடமைபுரியும் பட்டதாரிகளுக்கு இதற்கு முன்பிருந்த அரசாங்களும் அநீதியை ஏற்படுத்தி இருந்தன. ஆனாலும் அவை ஒரு சில தீர்வுகளைத் தருவதற்கு முயற்சிகள் எடுத்திருந்தன. ஆனால் தற்போதைய அரசாங்க காலத்தில் நாங்கள் பாரிய அநீதிகளுக்கு உள்வாங்கப்பட்டிருக்கின்றோம்.

நாங்க பல போராட்டங்கள், பல கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தோம். ஆனால் இதுவரைக்கும் இந்த அரசாங்கம் எமது விடயத்தில் தீர்வை எட்டும் என்ற நம்பிக்கையும் எமக்கு இல்லை. எமக்கு தீர்வை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாடும் இந்த அரசாங்கத்திடம் இல்லை.

எங்களுடைய பிரச்சனை தொடர்பில் அரசாங்கம் மட்டுமல்ல பலரும் சொல்லுகின்ற விடயம் ஆசிரியர் சேவை பிரமானக் கோவையில் சொல்லப்படுகின்ற விடயங்களை எங்கள் விடயத்திலும் உள்வாங்க முனைகின்றார்கள்.

பட்டதாரிகளாக இருந்தால், வேறு திணைக்களங்களில் இருக்கும் பட்டதாரிகள் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்க வேண்டுமாக இருந்தால் அவர்களுக்கு போட்டிப் பரீட்சை வைத்து உள்வாங்க வேண்டும் என்று ஆசிரியர் சேவைப் பிரமானக் கோவை சொல்லுகின்றது.

அரசாங்கமும் அந்த அடிப்படையில் தான் செய்வோம் என்று குறிப்பிடுகின்றது. அரசாங்கத்துடன் இணைந்த பலரின் நிலைப்பாடுகளும் அதுவாகத்தான் இருக்கின்றது. ஆனால் நாங்கள் கேட்பது என்னவென்றால் அரசாங்கம் சொல்வது போல் ஆசிரியர் சேவை பிரமானக் கோவை பின்பற்றுவதாக இருந்தால் கடந்த மாதம் தென் மாகாணத்தில் பட்டதாரிகளுக்குரிய ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

எந்தவித போட்டிப் பரீட்சையும் இல்லை, நேர்முகத் தேர்வும் இல்லை, வெறுமனே அவர்களது கோவைகளைப் பரிசீலித்தே அந்த நியமனம் வழங்கப்பட்டது. இவர்களும் பட்டதாரிகள் தான், தென்மாகாணமும் இலங்கையில் தான் இருக்கின்றது.

அவ்வாறு தென்மாகாண பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படுகின்ற போது ஆசிரியர் சேவை பிரமானக் கோவை பார்க்கப்படவில்லை ஆனால் பாடசாலையில் இணைக்கப்பட்டு ஐந்து வருடங்களாக ஆசிரியர் பணியை ஆற்றிவருகின்ற இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் போதுதான் சேவைப் பிரமான கோவை பார்க்கின்றார்கள். இது எவ்வாறான கண்கட்டி வித்தை என்று எங்களுக்குத் தெரியவில்லை.

ஒரு மாற்றத்தை எதிர்நோக்கியே இந்த அரசாங்கத்தை நாங்களும் வாக்களித்து கொண்டு வந்திருந்தோம். இந்த அரசாங்க கடந்தகாலத்தில் தாங்கள் ஆட்சியில் இல்லாத போது எமது பிரச்சனைக்கு அவர்களும் ஆதரவு வழங்கி எங்களுடன் இணைந்து கல்வி அமைச்சின் முன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், எங்களை ஊக்குவித்தவர்கள். ஆனால் அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் எங்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பது ஒரு வேடிக்கையானதாக இருக்கின்றது.

பாடசாலைகளில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடந்த ஐந்து வருடங்களாக பல இன்னல்களைத் தாண்டி பல போராட்டங்களுக்கு மத்தியில் புரிந்து வந்திருக்கின்றார்கள். இப்போது போட்டிப் பரீட்சை என்பதைக் கையில் எடுத்தால் அவர்கள் இந்த ஐந்து வருடங்களும் பல போராட்டங்களின் மத்தியில் ஆற்றிவந்த பணிக்கு யார் பொறுப்புக் கூறுவது? இந்த ஐந்து வருடங்கள் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தூக்கிப்பிடித்தவர்கள் நாங்கள்.

போட்டிப் பரீட்சை என்பது ஒரு தெரிவுநிலையை இலகுபடுத்துவதற்கான வழிமுறையே தவிர இதன்மூலம்ஒரு திறமையான ஆசிரியரைத் தெரிவு செய்வதென்பதல்ல. இது இந்த அரசாங்கத்திற்குத் தெரியும். எங்களது தெரிவுமுறை கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் இடம்பெற்றே அவர்கள் பாடசாலைக்கு இணைக்கப்பட்டிருந்தார்கள். தற்போது போட்டிப் பரீட்சை என்றால் இந்த ஐந்து வருடத்திற்கும் யார் பொறுப்புச் சொல்வது.

இந்த நியமனங்கள் கடந்த அரசாங்கத்தினால் வழங்கப்பட்டமையால்இதனை ஒரு அரசியல்பழிவாங்களாக மேற்கொள்கின்றார்கள் என்று எண்ணுகின்றோம். தற்போது நாட்டில் பல குற்றங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன, ஊழலுக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதனை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்.

எமது பிரச்சனை தொடர்பில் கடந்த 08ம் திகதி தொடக்கம் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்தோம். ஆனால் இதுவரைக்கும் அரசாங்கம் வாய் திறக்கவில்லை. எமது இந்த ஒரு பிரச்சனைக்கே தீர்வு காண முடியாத அரசாங்கம். நாட்டில் நிலவும் பல பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காண முடியும்.

ஜனாதிபதி அவர்கள் நாட்டு மக்களுக்கு ஏற்றவாறே சட்டங்கள் இயற்றப்படும் என்று சொல்லி இருக்கின்றார். நாங்களும் இந்த நாட்டுப் பிரஜைகள் தான். எங்கள் பிரச்சனை நாட்டின் ஜனாதிபதிக்குத் தெரியவில்லையா? எங்களுடைய பிரச்சனைக்குத் தீர்வு தரவேண்டியவர்கள் ஜனாதிபதியும், பிரதமரும் தானே தவிர கட்சியில் இருக்கும் ஏனையவர்கள் அல்ல.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இருக்கின்றார்கள். பாராளுமன்றத்தில் ஒரு விசேட வர்த்தமானியூடாக எமது பிரச்சனையைத் தீர்க்க முடியும். நாட்டில் நிலவும் ஆசிரியர் பற்றக்குறையும் அனைவருக்கும் தெரியும். இவற்றிற்குக் கையிலே தீர்வை வைத்துக் கொண்டு தீர்வில்லாமல் காட்ட நினைப்பது இந்த அரசாங்கத்தின் மாயைகளில் ஒன்று.

எனவே எங்களுக்குரிய தீர்வினை நோக்கி இம்மாத இறுதியில் நாங்கள் கொழும்பில் பாரிய ஆர்ப்பட்டமொன்றை முன்னெடுப்பதுடன் அன்றிலிருந்து எமக்குத் தீர்வு கிடைக்கும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தினையும் ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ளோம்.

உலகத்திலே எங்குமில்லாதவாறு இங்கு பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அநீதிகளுக்கும், அவமானங்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள். கல்விப் புலத்தில் இருக்கும் சிலரின் பார்வை அப்படித் தான் இருக்கின்றது. ஆசிரியர் சேவையில் கற்பித்தல் மட்டுமின்றி பல விடயங்களைச் சொல்லிக் கொடுக்கின்ற சேவை அது.

ஆனால் அங்கு இருப்பவர்கள் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றமையை எவ்வாறு எடுத்துக்கொள்வதென்று தெரியவில்லை. எமது ஐந்து வருட சேவையினைக் கருத்திற்கொண்டு வயதெல்லையினை மாற்றிக் கொடுத்திருக்கின்றோம் என்று அரசாங்கம் கூறுகின்றது. இந்த விடயம் 10 நாட்கள் பட்டினி இருந்தவனுக்கு தண்ணீர் கொடுத்துவிட்டு பசியைத் தீர்த்துவிட்டோம் என்று கூறுவது போன்றதான ஒரு செயலாகும்.

நாங்கள் நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த பட்டதாரிகள், பட்டதாரிகள் ஒன்றிணைந்தால் நாட்டில் என்னவாகும் என்பது கடந்த அரசாங்கங்களுக்கு நடந்த நிகழ்வுகள் ஒரு தக்க சான்று. அதே போன்றுதான் எங்களுடைய பிரச்சனைக்குச் சரியான ஒரு தீர்வு கிடைக்கப்படாவிடின் எந்தவொரு இடத்திற்கும், எந்தவொரு வழிமுறைக்கும் இறங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

## நாகை – காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை பருவநிலை மாற்றத்தால் நவம்பர் மாதம் நிறுத்தம்!



பருவநிலை மாற்றம் காரணமாக நாகை - காங்கேசன்துறைக்கிடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்து நவம்பர் மாதம் நிறுத்தப்படும் என்று சுபம் கப்பல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுந்தர்ராஜன் தெரிவித்தார்

இன்று ஊடகங்களிடம்கருத்துத்தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுபம் கப்பல் நிறுவனம் நாகை துறைமுகம் இலங்கையின் காங்கேசன்துறைக்கிடையே சிவகங்கை பயணிகள் கப்பலை இயக்கி வருகிறது. இந்தக் கப்பலில் கடந்த ஓராண்டில் 20,000க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்துள்ளனர்.

நாளுக்கு நாள்பயணிகளின்வருகை அதிகரித்து வருகிறது. புதிய கப்பல் போக்குவரத்து விரைவில் தொடங்கப்படவுள்ளது. இதற்காக புதிய கப்பல் சீனாவில் இருந்து புறப்பட்டுள்ளது. அந்தக் கப்பல் நவம்பர் மாதம் இறுதிக்குள் நாகை வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடகிழக்குப் பருவமழை ஆரம்பித்துள்ளதால் பருவநிலை மாற்றம் ஏற்படும். இதனால், கடல் சீற்றம் மற்றும் சூரைக்காற்று காரணமாக கப்பல் இயக்குவதில் சிக்கல் உள்ளது. ஆகவே நவம்பர் மாதம் முழுவதும் சிவகங்கை பயணிகள் கப்பல் இயக்கப்படாது.

கடந்த 30 ஆண்டுகளின் காலநிலை தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, நிகழாண்டு நவம்பர் மாதத்தை தவிர்த்து, டிசம்பர், ஜனவரி மாதங்களில் வழக்கம்போல் சிவகங்கை கப்பல் இயக்கப்படும் எனத் தெரிவித்தார். (ஐ)

## மாணவர்களுக்கான பாடப்புத்தகம் தொடர்பில் கல்வி அமைச்சின் அறிவிப்பு

*பாடசாலைகளுக்கான பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் நிறுத்தப்படவில்லை என்றும், அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் சில வகுப்புகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளது.*

*இதன்படி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் அமுலுக்கு வரும் கல்வி சீர்திருத்தங்களின் கீழ் வராத 2 முதல் 5 மற்றும் 7 முதல் 11 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழக்கம்போல் வழங்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ குறிப்பிட்டுள்ளார்.*

*அத்துடன் கல்வி சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படாது.*

*அதற்கு பதிலாக எளிமைப்படுத்தப்பட்ட கற்றல் கையேடுகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.*

*மேலும் ஆசிரியர்களுக்கான கற்றல் கையேடுகள் அச்சிடும் பணிகள் நிறுத்தப்படவில்லை என்றும், புதிய கல்விச் சீர்திருத்தங்களின் தேவைகளுக்கு ஏற்ப அவை அச்சிடப்படும் என்றும் நாலக களுவெவ தெளிவுபடுத்தினார்.*

*அத்துடன் 2 முதல் 5, 7 முதல் 11 ஆம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்களும், 1 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கான கற்றல் கையேடுகளும் தற்போது அச்சிடப்பட்டு வருகின்றன. இவை நவம்பர் 15க்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

*இதற்கமைய நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பணி டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவடைய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.*

# இந்தியாவின் 'தங்க மகன்' நீரஜ் சோப்ராவுக்கு ராணுவத்தில் கவுரவ பதவி



ஈட்டி எறிதல் போட்டியில் அதிக தங்க பதக்கங்களை வென்று சாதனை படைத்த நீரஜ் சோப்ராவுக்கு இந்திய ராணுவத்தில் கவுரவ பதவி வழங்கப்பட்டுள்ளது.

டில்லியில் உள்ள சவுத் பிளாக்கில் நடந்த விழாவில், ஈட்டி எறிதல் போட்டியில் அதிக தங்க பதக்கங்களை வென்று குவித்த நீரஜ் சோப்ராவுக்கு இன்று இந்திய ராணுவத்தில் கவுரவ லெப்டினன்ட் கர்னல் பதவி வழங்கப்பட்டது. இந்த, விழாவில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், ராணுவத் தலைமைத் தளபதி உபேந்திர திவேதி கலந்து கொண்டனர்.

கடந்த 2016ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நீரஜ் சோப்ரா ஜூனியர் கமிஷன்டு அதிகாரியாக இந்திய ராணுவத்தில் சேர்ந்தார். முன்னதாக, நீரஜ் சோப்ராவுக்கு பத்மஸ்ரீ, மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருது, அர்ஜுனா விருது, பரம் விஷிஷ்ட் சேவா பதக்கம் மற்றும் விஷிஷ்ட் சேவா பதக்கம் வழங்கப்பட்டது.

2020ம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் தடகளத்தில் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய தடகள வீரர் என்ற வரலாற்றைப் படைத்தார் நீரஜ் சோப்ரா. 2024ம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கத்தையும், 2023ம் ஆண்டு உலக தடகள சாம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கத்தையும் வென்று சாதனை படைத்தார்.

இவர் ஆசிய விளையாட்டு, காமன்வெல்த் விளையாட்டு மற்றும் டயமண்ட் லீக் போட்டிகளில் பல தங்கப் பதக்கங்களையும் வென்றுள்ளார். இவர், ஈட்டி எறிதல் போட்டியில், 90.23 மீட்டர் (2025) எறிந்து இந்திய விளையாட்டு வரலாற்றில் ஒரு மைல்கல் சாதனையை படைத்துள்ளார். நீரஜ் சோப்ராவின் சாதனைகளுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார். இது குறித்து ராஜ்நாத் சிங் கூறுகையில், 'வருங்கால சந்ததியினருக்கு நீரஜ் சோப்ரா ஒரு உத்வேகமாக இருக்கிறார்.

நீரஜ் சோப்ரா ஒழுக்கம், அர்ப்பணிப்பு மற்றும் தேசிய பெருமை ஆகியவற்றின் உயர்ந்த கொள்கைகளை உள்ளடக்கியவர். விளையாட்டு சகோதரத்துவம் மற்றும் ஆயுதப்படைகளுக்குள் உள்ள தலைமுறைகளுக்கு நீரஜ் சோப்ரா ஒரு உத்வேகமாக சேவை செய்கிறார். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# தென் மாவட்ட வேட்பாளர் தேர்வு கனிமொழியிடம் ஒப்படைப்பு



தென் மண்டல சட்டசபை தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் தேர்வு செய்யும் பணியை, தி.மு.க., மண்டல பொறுப்பாளரும், துணை பொதுச் செயலருமான கனிமொழியிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதால், துணை முதல்வர் உதயநிதி ஆதரவாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

மீண்டும் ஆட்சியை தக்கவைக்க வேட்பாளர்கள் தேர்வில், தி.மு.க., தலைமை கூடுதல் கவனம் செலுத்த உள்ளது. தமிழகத்தை ஏழு மண்டலங்களாக பிரித்து, பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். அதில், தென் மண்டல பொறுப்பாளராக உள்ள கனிமொழியிடம் தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் தேர்வு செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டு உள்ளது.

தென் மாவட்டங்களில் சபாநாயகர் அப்பாவு, முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன், அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், கீதா ஜீவன் ஆகியோரின் தொகுதிகளில் உட்கட்சி பூசல்கள் அதிகமாக உள்ளன. அதனால் தகுதியானவர்களையும், மக்கள் செல்வாக்கு உள்ளவர்களையும் தேர்வு செய்ய வேண்டும் என, கனிமொழிக்கு கட்சி தலைமை அறிவுறுத்தி உள்ளது.

இது தெரிந்ததும், இம்மாவட்டங்களில் உள்ள துணை முதல்வர் உதயநிதி ஆதரவு நிர்வாகிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். அதற்கு காரணம், இளைஞரணி நிர்வாகிகளாக இருக்கும் சிலர், தங்களுக்கு 'சீட்' கிடைக்காமல் போய்விடும் என, அஞ்சுகின்றனர். (ஐ)

# வெளிநாடு செல்ல தி.மு.க.வினருக்கு தடை

'சட்டசபைத் தேர்தல் முடியும் வரை, வெளி நாடுகளுக்கு செல்ல வேண்டாம்' என தி.மு.க., அமைச்சர்கள், எம்.எல்.ஏ.,க்கள், மாவட்டச் செயலர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடக்க உள்ளது. இதற்கு, தி.மு.க.,வை தயார்படுத்தும் வகையில், 'உடன்பிறப்பே வா' என்ற தலைப்பில், 'ஒன் டு ஒன்' நிகழ்ச்சி வாயிலாக, சென்னை அறிவாலயத்தில் சட்டசபை தொகுதி நிர்வாகிகளை நேருக்கு நேர் சந்தித்து ஆலோசனைகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கி வருகிறார். அந்த வகையில், இதுவரை, 150க்கும் மேற்பட்ட சட்டசபை தொகுதிகளின் நிர்வாகிகளை சந்தித்துள்ளார். இந்நிலையில், தி.மு.க., அமைச்சர்கள், எம்.எல்.ஏ.,க்கள், கட்சியின் மா.செ.,க்களுக்கு முதல்வர் ஸ்டாலின் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது குறித்து, தி.மு.க., வட்டாரங்கள் கூறியதாவது: கடந்த நாலரை ஆண்டுகளில் தி.மு.க., அரசு, நிறைய மக்கள் நலத் திட்டங்களை தீட்டி, அதை முறையாக நிறைவேற்றி இருக்கிறது. சொல்லப்போனால், ஆட்சி வாயிலாக நிறைய சாதனைகள் படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவற்றையெல்லாம் கட்சியின் மா.செ.,க்களும் எம்.எல்.ஏ.,க்களும் தொகுதி பொறுப்பாளர்களும் முறையாக கொண்டு சேர்க்கவில்லை. இதனால், தி.மு.க., மீதான ஈர்ப்பு பொதுமக்களுக்கு குறைந்துவிட்டதாக, பல்வேறு கருத்துக்கணிப்புகள் வாயிலாக தி.மு.க., தலைமை கண்டறிந்துள்ளது.

அதேபோல, கட்சித் தொண்டர்களையும் பொது மக்களையும் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் அரவணைத்து செல்ல வில்லை என்ற குற்றச்சாட்டு தமிழகம் முழுதும் உள்ளது. தி.மு.க., ஆட்சியின் மீது ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகியோரின் ஆதரவு எப்படி உள்ளது மக்கள் என்ன எதிர்பார்க்கின்றனர் என்பதையெல்லாம் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.,க்கள், மாவட்டச் செயலர்கள் கேட்டறியாமல் உள்ளனர். இதையெல்லாம் விரைந்து சரி செய்ய வேண்டும் என முதல்வர் நினைக்கிறார். அதனால், அமைச்சர்கள், மா.செ.,க்கள், கட்சி நிர்வாகிகள் யாரும் தேர்தல் முடியும் வரை வெளிநாடுகளுக்கு செல்லக் கூடாது என உத்தரவிட்டுள்ளார். துறை சார்ந்து வெளிநாடுகளில் நடக்கும் நிகழ்வுகளுக்கு மட்டும் அமைச்சர்கள் வேண்டுமானால், கட்சி தலைமையின் உரிய அனுமதி பெற்று செல்லலாம். ஆனால் மற்றவர்கள், தொடர்ந்து தொகுதி மக்களை சந்திக்க வேண்டும். அவர்கள் குறைகளை கேட்டு களைய வேண்டும். அரசு நிறைவேற்றிய திட்டப் பலன்களை, மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். கட்சிக்குள் மாவட்டம் தோறும் இருக்கும் கோஷ்டி பூசல்களையும் உடனடியாக தீர்க்க வேண்டும் எனவும் கூறியிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

கட்சியின் கோஷ்டி பூசலை தீர்க்கும் விவகாரத்தில், பொறுப்பு அமைச்சர்களால் தீர்வு காண முடியாதவர்கள், மண்டல பொறுப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அவர்கள் அப்பிரச்னையை தீர்த்து வைப்பர். அவர்களாலும் முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டால் தான், தலைமை நிலைய நிர்வாகிகள் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். கட்சி பிரச்னைகள் அனைத்தும், இம்மாதம் இறுதிக்குள் தீர்வு காண வேண்டும். பொதுமக்கள் தெரிவிக்கும் அனைத்து கோரிக்கைகளையும் உரிய அதிகாரிகள் மற்றும் கலெக்டர் கவனத்துக்குக் கொண்டு சென்று, ஒவ்வொன்றையும் தீர்க்க வேண்டும். இப்படி செய்தால் மட்டுமே வரும் சட்டசபை தேர்தலில், தி.மு.க., எதிர்பார்த்த வெற்றியை பெறும் என முதல்வர் கூறியுள்ளார். இவ்வாறு அந்த வட்டாரங்கள் கூறின.



# வி.ஐ.பி., தொகுதியாக மாறும் விருத்தாசலம்: விஜயகாந்துக்கு பிறகு விஜய் போட்டி?

தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்துக்கு முதல் வெற்றி வாய்ப்பை கொடுத்த விருத்தாசலம் தொகுதியில், நடிகர் விஜய் போட்டியிடுவார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கடலூர் மாவட்டத்தில், அதிக கிராமங்களை கொண்டது விருத்தாசலம் சட்டசபை தொகுதி. விவசாயம் மட்டுமே பிரதான தொழிலாக உள்ளது.

பா.ம.க., கோட்டையாக இருந்த இத்தொகுதியில், 2006 சட்டசபை தேர்தலில் களமிறங்கிய தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்த் வெற்றி பெற்று சாதனை படைத்தார்.

அடுத்து நடந்த தேர்தலில் தே.மு.தி.க., வேட்பாளர் முத்துக்குமார் வெற்றி பெற்றார். இது அக்கட்சிக்கு தொகுதியில் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியது. இதனால், பா.ம.க., கோட்டையில் ஓட்டை விழுந்தது' என அரசியல் விமர்சகர்கள் பலரும் கருத்து தெரிவித்தனர்.

இதற்கிடையே, விஜயகாந்துக்கு உடல்நலக் குறைவு, அ.தி.மு.க., எதிர்ப்பு போன்ற காரணங்களால் தே.மு.தி.க., அத்தொகுதியில் பின்னடைவை சந்தித்தது. அதற்கடுத்து அவரது மரணம், நிர்வாகிகள் மாற்று கட்சிக்கு ஓட்டம் என, தே.மு.தி.க., செல்வாக்கை மீண்டும் அங்கு பெற முடியவில்லை.

இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தை துவங்கிய நடிகர் விஜய், இரண்டாவது மாநில மாநாட்டில் 'கேப்டன் விஜயகாந்த்' எனது அண்ணன் என குறிப்பிட்டு பேசினார். இதனை, விஜயகாந்த் மனைவியும், தே.மு.தி.க., பொதுச் செயலாளருமான பிரேமலதா விமர்சனம் செய்தார்.

இந்நிலையில், விஜயகாந்துக்கு முதல் வெற்றி வாய்ப்பை கொடுத்த, விருத்தாசலம் தொகுதி, விஜய்க்கும் வெற்றி வாய்ப்பை தரும் என அக்கட்சியினர் எதிர்பார்க்கின்றனர்.

அதுபோல், அவரது குடும்ப ஜோதிடர் ஒருவர், 'வி' என்ற முதல் எழுத்தில் துவங்கும் தொகுதியில் போட்டியிட்டால் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கும் என கணித்து கூறியுள்ளார்.


'வி' என்றால் 'விக்டரி', வெற்றி என அர்த்தம். விஜய் என்ற பெயரின் முதல் எழுத்து 'வி' என்பதால், அதே எழுத்தில் துவங்கும் தொகுதியில் போட்டியிடுவது சிறந்தது என கூறப்படுகிறது. இதனால், விஜயகாந்தை அண்ணன் என கூறும் த.வெ.க., தலைவர் விஜய், விருத்தாசலம் தொகுதியை 'குறி' வைப்பதாகவே கூறப்படுகிறது.

இதற்காக தொகுதியின் பலம், பலவீனம் மற்றும் மக்களின் வருவாய் ஆதாரம், எதிர்பார்ப்பு மற்றும் தி.மு.க., - அ.தி.மு.க.,வின் கட்டமைப்பு குறித்த விவரங்களை த.வெ.க., வினர் சேகரித்து வருகின்றனர். தேர்தல் நெருங்கும் நேரத்தில், விருத்தாசலத்தில் விஜய் போட்டியிடுவார் என்ற அறிவிப்பு வெளியாகலாம் என பரவலாக பேசப்படுகிறது.


நடிகர் விஜயகாந்தை தொடர்ந்து, நடிகர் விஜயும் களமிறங்க தயாராகி வருவதால், விருத்தாசலம் தொகுதி வி.ஐ.பி., அந்தஸ்து பெறும் என அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரி விக்கின்றனர். (ஐ)

# முருகனை நினைக்காத நாளில்லையே...

## இன்று கந்தசஷ்டி ஆரம்பம்







சூரபத்மனால் துன்பப்பட்ட தேவர்கள், "உங்களைப் போன்ற பலமுள்ள ஒரு இளைஞனை எங்களுக்கு தர வேண்டும்" என சிவபெருமானிடம் வேண்டினர். ஈசானம், தத்புருஷம், அகோரம், வாம தேவம், சத்யோஜாதம் என சிவனுக்கு ஐந்து முகங்கள் உண்டு. ஆனால் ஞானிகள் மட்டுமே வழிபடும் முகம் ஒன்று(அதோமுகம்) அவரது இதயத்தில் உள்ளது. கீழ் நோக்கிய அந்த அதோமுகத்தை வெளிப்படுத்தி ஆறுமுகமாக அவதரிக்கச் செய்தார். இதற்காக அவர் தன் நெற்றிக் கண்ணில் இருந்து தீப்பொறிகள் வரவழைத்தார். அக்னிபகவான் அவற்றை வாயுவிடம் அளித்தார். வாயு அதைத் தாங்க முடியாமல் சரவணப் பொய்கையில் சேர்த்திட தீப்பொறிகள் ஆறு குழந்தைகளாக மாறின. பார்வதி அவர்களை ஒன்றிணைக்க 'ஆறுமுகன்' எனப் பெயர் பெற்றார்.

"கருணை கூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பனிரெண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய"

சிவன் வேறு, முருகன் வேறு அல்ல. இருவரும் ஒருவரே! சூரபத்மனை வதம் செய்த முருகன் அவனை சேவல், மயிலாக மாற்றினார். அவனது ஆணவத்தை அழித்ததும் சேவலை கொடியாகவும், மயில் வாகனமாகவும் ஏற்றுக் கொண்டார். இதை நினைவூட்டும் வகையில் கோயில்களில் சூரசம்ஹார நிகழ்ச்சி ஐப்பசி வளர்பிறையில் முதல் ஆறு நாள் நடக்கிறது. இது திருச்செந்தூரில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்று பழமொழி உண்டு. அதற்கு சஷ்டியில் விரதம் இருந்தால் அகமாகிய(உள்ளே) கருப்பையில் கரு தோன்றும் என்பது பொருள். எனவே சஷ்டி விரதம் இருந்தால் முருகனருளால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

சஷ்டி என்பது ஆறாவது நாள். ஆறாம் எண்ணின் அதிபதி சுக்கிரன். சுக்கிரனின் அதி தேவதை மகாலட்சுமி. எனவே சஷ்டி விரதம் மூலம் பதினாறு வகையான பேறுகளை பெறலாம். பிரதமை

முதல் சஷ்டி திதி வரை ஆறு நாளும் அதிகாலை எழுந்து கந்தசஷ்டி கவசம், திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம் பாடுவது அவசியம். நாள் முழுவதும் விரதம் இருந்து இரவு பால், பழம் மட்டும் சாப்பிட வேண்டும். சூரசம்ஹாரத்தை தரிசித்து ஏழாம் நாள் காலையில் பூஜை செய்து விரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.

"இசை பயில் சடாச்சரம் அதனாலே
இகபர சௌபாக்யம் அருள்வாயே"

என்னும் திருப்புகழ் கூறுவது போல சஷ்டி விரதம் இருப்பவர்களுக்கு எல்லா நன்மையும், நீண்ட ஆயுளும் கிடைக்கும். சஷ்டி நாயகன் முருகன் அருளால் எல்லா வரமும் பெறுவோம்.

பார்வதிதேவி தாட்சாயினியாக அவதரித்த போது அவளுக்கு தந்தை ஆகும் பாக்கியம் பெற்றவன் தட்சன். ஆணவம் மிக்க அவன், மருமகன் சிவனையே அவமதித்தான். கடவுளை அவமதிப்பவர்களே மறுபிறவியில் அசுரர்களாக பிறப்பர். அவர்களுக்கு தண்டனை நிச்சயம் உண்டு. தட்சன் மறுபிறப்பில் பத்மாசுரன் என்னும் அசுரனாக பிறந்தான். அவனது சகோதரர்கள் கஜமுகாசுரன், சிங்கமுகன், பானுகோபன். இவர்கள் தேவர்களை துன்புறுத்தினர்.

இந்நிலையில் சிவன் தன் நெற்றிக் கண்ணில் இருந்து தீப்பொறிகள் வரவழைத்தார். அக்னிபகவான் அவற்றை வாயுவிடம் அளித்தார். வாயு அதைத் தாங்க முடியாமல் சரவணப் பொய்கையில் சேர்த்திட தீப்பொறிகள் ஆறு குழந்தைகளாக மாறின. பார்வதி அவர்களை ஒன்றிணைக்க 'ஆறுமுகன்' எனப் பெயர் பெற்றார். நவவீரர்கள் என்னும் ஒன்பது வீரர்களுடன் இணைந்து போருக்கு தயாரானார் முருகப்பெருமான். முதலில் பத்மாசுரனின் மூன்று தம்பிகளை அழித்தார். மாயாஜாலத்தில் வல்லவனான பத்மாசுரன் மாமரமாக மாறினான். அவனை அழிக்க மரத்தை இரண்டாக பிளந்தார். ஒரு பாதியை சேவலாக்கி கொடியாகவும், மறு பாதியை மயிலாக்கி வாகனமாகவும் மாற்றினார்.

இதை நினைவூட்டும் வகையில் சூரசம்ஹார நிகழ்ச்சியில் சேவலை பறக்க விடுவதோடு, சூரனின் தலைப்பகுதியில் மாவிலையைக் கட்டுகின்றனர். மாமரமாக இருந்த சூரனுக்காக மாவிலை கட்டப்படுகிறது.

விரதம் ஏன் இருக்க வேண்டும்? அதனால் உடலில் என்ன மாற்றம் நிகழ்கிறது என்பது குறித்து காஞ்சி மஹாபெரியவர் சொல்வதை கேளுங்கள்.



உடல்நலம் கருதியே நம் முன்னோர்கள் விரதங்களை ஏற்படுத்தினர். எப்போதும் எதையாவது சாப்பிட்டபடி இருந்தால், ஜீரண உறுப்புக்குத் தொடர்ந்து வேலை இருக்கும். அதற்கு ஓய்வு தர வேண்டாமா... அதற்காகத் தான் விரதம் இருக்கிறோம். விரதத்தை 'உபவாசம்' என்பர். 'உப' என்றால் அருகில். 'வாசம்' என்றால் வசிப்பது. அதாவது 'அருகில் வசிப்பது' என பொருள். யாருக்கு அருகில் வசிப்பது? கடவுளுக்கு அருகில். அதாவது கடவுளை பற்றி எப்போதும் சிந்திப்பது. சாப்பிடாமல் இருப்பதால் உடம்பில் உள்ள கொழுப்பு கரையும். வயிறு சுருங்கும். பிறகு எப்போதும் மனம் பக்தியில் ஈடுபடும். இதனால் முற்பிறவியில் செய்த தீவினை கழியும் என்கிறார்.



# நெதன்யாகுவை கைது செய்யும் முடிவு: கைவிடுமாறு கனடாவுக்கு இஸ்ரேல் வலியுறுத்தல்



பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீதான கைது வாரண்ட் உத்தரவு அமல்படுத்தும் முடிவை கைவிடுமாறு கனடாவை இஸ்ரேல் வலியுறுத்தி உள்ளது.

காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 67 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் குழந்தைகள், பெண்கள் ஆகியோரும் அடங்குவர். எனவே போர்க்குற்றம் செய்ததாக நெதர்லாந்து சர்வதேச கோர்ட்டில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீது வழக்கு தொடரப்பட்டது. கடந்த ஆண்டு அவருக்கு எதிராக சர்வதேச கோர்ட் கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

தற்போது, இஸ்ரேல்-காசா போர் அமெரிக்க அதிபர் டிரம்ப் தலையீட்டால் முடிவுக்கு வந்தது. அதேசமயம் அவருக்கு எதிரான கைது வாரண்ட் தொடர்ந்து நிலுவையில் உள்ளது. இந்நிலையில், 'தனி பாலஸ்தீன நாடு உருவாக்கத்துக்கு பெஞ்சமின் நெதன்யாகு தடையாக இருக்கிறார்.

எனவே கனடாவில் நுழைந்தால் சர்வதேச கோர்ட்டின் உத்தரவை அமல்படுத்தும் விதமாக அவர் நிச்சயம் கைது செய்யப்படுவார்' என கனடா பிரதமர் மார்க் கார்னி கூறியிருந்தார். இந்த முடிவை கைவிடுமாறு இஸ்ரேல் வலியுறுத்தி உள்ளது. (ஐ)

## டிரம்ப், புடின் பேச்சுவார்த்தை திடீர் ரத்து தற்போது சந்திப்பு இல்லை என வெள்ளை மாளிகை அறிவிப்பு



வாஷிங்டன் ரஷ்ய அதிபர் புடின்-அமெரிக்க அதிபர் டிரம்ப் இடையே நடைபெற இருந்த சந்திப்பு திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது.

ரஷ்யா, உக்ரைன் நாடுகள் இடையேயான போர், 3 ஆண்டுகளை கடந்தும் நீடித்து வருகிறது. இவ்விரு நாடுகளுக்கு இடையே அமெரிக்கா மத்தியஸ்தம் செய்து வந்த போதிலும் போர் முடிவுக்கு வரவில்லை.

ஆக.15ம் தேதி ரஷ்ய அதிபர் புடினை, டிரம்ப் சந்தித்து பேசினார். அலாஸ்காவில் நடைபெற்ற இந்த பேச்சுவார்ததையில் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. போர் நிறுத்தம் பற்றிய எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

அண்மையில் வாஷிங்டனில் டிரம்பை, உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சந்தித்து பேசினார். இதைத் தொடர்ந்து புடினை நேரில் சந்திக்க உள்ளதாக டிரம்ப் தெரிவித்து இருந்தார். இவர்களின் சந்திப்பு ஹங்கேரி நாட்டில் உள்ள புடாபெஸ்ட் நகரத்தில் நடப்பதாக இருந்தது.

இந் நிலையில், திடீரென இந்த சந்திப்பு தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டு உள்ளது. இந்த விவரத்தை வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் மற்றும் அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபியோ இடையே நடைபெற்ற தொலைபேசி உரையாடலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர்கள் கூறி உள்ளனர். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது குறித்து பொதுவெளியில் எதையும் தெரிவிக்க முடியாது என்றும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்து இருக்கின்றனர்.

இருநாடுகளின் அதிபர்கள் சந்திப்பின் போது உக்ரைனுடனான போர் குறித்து இறுதிக்கட்ட முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டு இருந்தது. தற்போது பேச்சுவார்த்தை ரத்து செய்யப்பட்டு உள்ளதால், உக்ரைன் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற டிரம்பின் எதிர்பார்ப்பு கைகூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருமணத்தில் 'ஹிஜாப்' அணியாத ஈரான் உயரதிகாரியின் மகள்



முஸ்லிம் சட்டங்கள் கடுமையாக பின்பற்றப்படும் ஈரான் நாட்டில், உச்ச தலைவரின் உதவியாளர் மகள் 'ஹிஜாப்' அணியாமல், அரைகுறை ஆடையுடன் திருமணம் செய்திருப்பது அந்நாட்டு பெண்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர் இடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்காசிய நாடான ஈரானில், ஷரியத் சட்டமானது கடுமையாக பின்பற்றப்பட்டு வருகிறது. இதன்படி, பொது இடங்களில் பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயமாகும்.

கடந்த 2022ம் ஆண்டு, தலைமுடி முழுமையாக மறையும்படி ஹிஜாப் அணியாததாக, மாஷா அமினி என்ற இளம் பெண் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதில் உயிரிழந்தார். அதைத் தொடர்ந்து, ஆடை தொடர்பான போராட்டங்கள் நடந்தன. ஆனால், கட்டுப்பாடுகளை குறைத்துக்கொள்ள அரசு மறுத்துவிட்டது.

இந்நிலையில், ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் ஆலோசகரான அலி ஷம்கானியின் மகள் திருமணம் சமீபத்தில் நடந்தது. இது தொடர்பான வீடியோ வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அதில் ஷம்கானியின் மகள் பதேமே, ஹிஜாப் அணியாமல் மார்பளவு மட்டுமே உள்ள கவுன் அணிந்து இருக்கிறார்.

இது குறித்து சமூக வலைதளங்களில் பலரும் ஆட்சேபம் தெரிவித்து, அரசுக்கு எதிராக பதிவிட்டு வருகின்றனர். (ஐ)



## எசவூதியில் முடிவுக்கு வந்தது கபாலா நடைமுறை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு இனி நிம்மதி

*50 ஆண்டுகளாக பின்பற்றி வந்த கபாலா என்ற தொழிலாளர் நடைமுறையை சவூதி அரேபியா முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.*

*வளைகுடா நாடுகளுக்கு உடல் உழைப்பை முன் வைத்து பல நாடுகளில் இருந்து தொழிலாளர்கள் சென்று வருகின்றனர். இந்தியாவில இருந்து மட்டுமல்ல தெற்காசியாவில் இருந்தும் ஏராளமானோர் வளைகுடா நாடுகளில் பணிபுரிந்து வருகின்றனர்.*

*இவர்களில் பெரும்பான்மையோர் இந்தியர்கள். இதை தவிர்த்து, பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம், இலங்கை நாடுகளில் இருந்தும் வளைகுடா நாடுகளுக்கு வேலைக்கு செல்கின்றனர். பெரும் எண்ணிக்கையில் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு என கபாலா என்ற நடைமுறை பின்பற்றப்படுகிறது.*

*வளைகுடா நாடுகளில் பணியமர்த்தப்படும் வெளிநாட்டு தொழிலாளர்களை கட்டுப்படுத்தும் ஒருமுறை தான் கபாலா. ஸ்பான்சர்ஷிப் என்பதற்கான அரபு மொழிச் சொல் தான் கபாலா.*

*இந்த நடைமுறை மூலம், முதலாளிகள் தங்களின் தொழிலாளர்கள் மீது முழு ஆதிக்கம் செலுத்தலாம். அவர்களின் விசா, பயணம், தங்கும் இடம், உணவு செலவுகள் உள்ளிட்டவற்றை ஸ்பான்சர் (கபீல் என்று அழைக்கப்படுபவர்) செய்பவர் ஏற்றுக் கொள்வார்.*

*தொழிலாளர்கள் தமது விருப்பப்படி சொந்த நாடு அல்லது ஊருக்கு திரும்பவோ அல்லது பணியை மாற்றவோ முடியாது. 1950ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த கபாலா நடைமுறையின் மூலம் புலம்பெயரும் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே இருந்து வருகிறது.*

*தற்போது இந்த நடைமுறையை முடிவுக்கு கொண்டு வந்திருப்பதாக சவூதி அரேபியா அறிவித்துள்ளது. பல வருட ஆய்வுகள், சீர்சிருத்தங்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு, இந்த நடைமுறையை நீக்குவதற்கான முடிவை தற்போது சவூதி அரேபியா எடுத்துள்ளது.*

*சவூதியில் உள்ள மக்கள் தொகையில் 42 சதவீதம் பேர் புலம்பெயர் தொழிலாளர்கள். கட்டட வேலை, வீட்டு பணியாளர், வேளாண்மை உள்ளிட்ட பல்வேறு வேலைகளுக்காக வந்துள்ளவர்கள். மேலும் கபாலா முறை ஒழிப்பு என்பது இளவரசர் முகமது பின் சல்மானின் தொலைநோக்கு திட்டம் 2030 என்பதின் ஒரு பகுதியாகும்.*

*கபாலா ஒழிப்பு மூலம், புலம்பெயர் தொழிலாளர்கள் ஸ்பான்சர் செய்வரின் ஒப்புதல் இல்லாமல் நாட்டை விட்டு வெளியேறலாம். தங்கள் முதலாளியின் ஒப்புதல் இல்லாமலேயே வேலைகளை மாற்றிக் கொள்ளவும் முடியும். (ஐ)*

## வெலிகம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதிநிதி ஆவார். மக்கள் பிரதிநிதிகள் இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாவது பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது.

இது தேசிய பாதுகாப்பு சார்ந்த பிரச்சினையொன்றாக இருக்கிறது என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்தநிலையில், குறித்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் அறிவித்த போது சபாநாயகர், நிலையியற் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தற்போது இது குறித்து கதைக்க முடியாது என்று அறிவித்த நிலையில், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் கடும் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சில நிமிடங்கள் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது.

பின்னர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான பிரதேச சபைத் தலைவர் மரணமடைந்ததாக தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றிய நிலையில் பல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பேச தொடங்கிய நிலையில் சில நிமிடங்கள் குழப்பம் ஏற்பட்டது.

இந்நிலையில் இவ்விடயம் தெடர்பில் தற்போது பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ஐ)

## கெஹெல்பத்தர.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பத்மேவிற்கு சொந்தமானதாக அடையாளம் காணப்பட்ட சொத்துக்கள் விபரம்,

பாதாள உலக குழுவின் செயல்பாட்டாளர்கள்

இல 260 - 1, மடெல்கமுவ, படபொத்த, உடுகம்பொல என்ற முகவரியில் உள்ள ஹோட்டலுக்குப் பின்னால் அமைந்துள்ள 20 பேர்ச் காணி இல 260 - 1, மடெல்கமுவ, படபொத்த, உடுகம்பொல என்ற முகவரியில் உள்ள அதே ஹோட்டல் வளாகத்தில் அமைந்துள்ள ஆறு அறைகளைக் கொண்ட பகுதியளவு முடிக்கப்பட்ட கட்டிடம்.

இந்த சொத்துக்கள் தொடர்பான தொடர்புடைய உண்மைகள் உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன,

மேலும் சட்டத்தின் பிரிவுகள் 8(1) மற்றும் 8(2) இன் படி பணிநீக்கம் உத்தரவு நிறைவேற்றப்பட்டது. அதன்படி, கெஹெல்பத்தர பத்மேவுடன் தொடர்புடைய சொத்துக்கள் இன்று (22) அதிகாரப்பூர்வமாக பறிமுதல் செய்யப்பட்டன.

அண்மையில், இந்தோனேசியாவில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கைகயில் கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட பாதாள உலக குழுவின் செயல்பாட்டாளர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளுக்கமைய, பல்வேறு நடவடிக்கைகளை பொலிஸாரும் குற்றப் புலனாய்வு பிரிவினரும் முன்னெடுத்து வருகின்றனர்.

## குறிகட்டுவான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீண்டகாலமாக சமுத்திர நிலைமைகளால் பாரியளவிலான புனரமைப்புக்கள் மேற்கொள்ளப்படாமையால், பாரியளவிலான கட்டமைப்பு ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளது.

போக்குவரத்து, யாத்திரிகர் பயணங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தியில் இறங்கு துறையின் முக்கியத்துவத்தை அடையாளங் கண்டு இடைநிலை வரவு செலவுத்திட்ட சட்டகத்தின் கீழ் குறிகட்டுவான் இறங்குதுறையை நிர்மாணிக்கின்ற வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பதில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இரத்தினபுரி வரைக்கும் புகையிரதப் பாதை

*களனிவெளி (கொழும்பு கோட்டை தொடக்கம் அவிசாவளை வரைக்குமான) புகையிரதப்பாதையை இரத்தினபுரி வரைக்கும் நீடிப்பதற்கான சாத்தியவளக் கற்கையை மேற்கொள்ளல் மற்றும் விரிவான திட்டத்தைத் தயாரித்தலுக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

*2025 ஆம் ஆண்டு வரவு –செலவுத்திட்டத்தின் மூலம் புகையிரதப் போக்குவரத்து நவீனமயப்படுத்தலின் கீழ் வினைத்திறனான புகையிரத சேவைகளை வழங்குதல் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக தற்போது இயங்கி வருகின்ற களனிவெளி புகையிரதப்பாதையை அவிசாவளையிலிருந்து மேலும் படிப்படியாக நீடிப்பதற்கு முன்மொழியப்பட்டு, அதற்குரிய அடிப்படை வேலைகளை ஆரம்பிப்பதற்கு 250 மில்லியன் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*அதற்கமைய, குறித்த பணிகளுக்கு ஆலோசனை சேவை வழங்கும் நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்காக குறித்த பெறுகைச் செயன்முறையை அமுல்படுத்துவதற்காக பதில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் போக்கு வரத்து அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

# இளஞ்சிவப்பு புதன்கிழமை





உலகளாவிய மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் அல்லது இளஞ்சிவப்பு மாதமாகக் கருதப்படும் ஒக்டோபர் மாதத்தில் இந்த விழிப்புணர்வூட்டலுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பிரதமர் (கலாநிதி) ஹரினி அமரசூரிய மற்றும் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன ஆகியோருக்கு மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வூட்டலுக்கான சின்னம் மற்றும் கைப்பட்டி அணிவிக்கும் நிகழ்வு பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்றது.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் குழுக்களின் பிரதித் தவிசாளர் ஹேமாலி வீரசேகர, ஆளும் கட்சியின் முதற்கோலாசான், அமைச்சர் (வைத்தியர்) நலிந்த ஜயதிஸ்ஸ, எதிரிக்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் கயந்த கருணாதிலக ஆகியோருக்கு சின்னங்களும், கைப்பட்டிகளும் அணிவிக்கப்பட்டன.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் நுழைவாயில் பகுதியில் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மார்பகப் புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வூட்டும் வகையிலான சின்னமும், கைப்பட்டியும் அணிவிக்கப்பட்டன. அத்துடன், ஒன்றியத்தினால் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன ஆகியோருக்கும் சின்னமும், கைப்பட்டியும் அணிவிக்கப்பட்டன.

இந்நிகழ்வுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமன்றி பாராளுமன்ற பணியாளர்களும் இளஞ்சிவப்பு நிறத்திலான ஆடையணிந்து வருகை தந்திருந்தனர்.

அத்துடன், பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய மார்பகப் புற்றுநோய் ஒழிப்புக் குறித்த விழிப்புணர்வூட்டல் தொடர்பில் பி.ப 4.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணையும் விவாதிக்கப்பட்டது.

உலகம் முழுவதிலும் பெண்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படும் புற்றுநோயாக மார்பகப் புற்றுநோய் காணப்படுகிறது. இதற்கு அமைய இலங்கையில் நாளாந்தம் 15 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாகவும் இதில் மூவர் உயிரிழப்பதாகவும் இங்கு கருத்துத் தெரிவித்த வைத்தியர்கள் தெரிவித்தனர். ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளித்தால் மார்பகப் புற்றுநோயை முழுமையாக குணப்படுத்த முடியும் என்றும், இதற்காக 20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மாதத்திற்கு ஒரு முறை சுய மார்பகப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினர்

அதன்படி, ஒக்டோபர் மாதத்தில் மட்டுமல்ல, இந்தப் பிரச்சினை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம், இந்த சமூகப் பேரழிவை ஒழிக்க வேண்டிய பொறுப்பு பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் உள்ளது என்பதும் வலியுறுத்தப்பட்டது. பாடசாலை மட்டத்தில் இது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், இளஞ்சிவப்பு புதன்கிழமை **(Pink Wednesday)** என்ற பெயரில் பல்வேறு தரப்பினரின் ஒருங்கிணைப்புடன் நாட்டில் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நாடாளுமன்றத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக, அனைத்துப் பாடசாலைகளினதும் காலைக் கூட்டங்களில் இவ்விடயம் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்ட பாடசாலை அதிபர்களின் ஊடாக நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளரிடம் ஒன்றியத்தினால் எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெணநாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ், ஏனைய பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள், தேசிய புற்றுநோய் தடுப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் ஸ்ரீனி அழகப்பெரும, விசேட வைத்திய நிபுணர் ஹசாரா பெர்னாந்து, இந்திரா புற்றுநோய் அறக்கட்டளையின் தலைவர் லங்கா ஜயசூர்ய திசாநாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)

# முஸ்லிம்களுக்கு எதிராக மட்டும் வழக்கு ஏன்?

மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவில் அரச காணிகளில் வசித்துவரும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மட்டும் வழக்குத் தொடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படும் முறைப்பாடு தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும் என காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் அரவிந்த செனரத் விதாரண தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) அன்று இடம்பெற்ற வாய்மூல விடைக்களுக்கான வினா நேரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஹிஸ்புல்லாஹ் எம்.பி. தனது கேள்வியில் , மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவில் அரச காணிகளில் 30 சதவீத முஸ்லிம்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பல ஆண்டுகளாகக் காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமல் அவர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

அத்துடன், அங்கு அரச காணிகளில் வசிக்கின்றவர்களை வெளியேற்ற வேண்டும் எனத் தெரிவித்து, அங்கு வாழும் முஸ்லிம்களுக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தொடுக்கப்பட்டு வருகின்றது. எனவே முஸ்லிம்களுக்கு எதிராக மாத்திரம் ஏன் இவ்வாறு செயற்படுகின்றனர் எனத் தேடிப்பார்க்கக் காணி அமைச்சினால் விசேட விசாரணைக் குழுவொன்றை நியமிக்க முடியுமா? என கேட்டார்.

இதற்கு பிரதி அமைச்சர் அரவிந்த செனரத் விதாரண பதிலளிக்கையில், மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவில் அரச காணிகளில் வாழ்ந்து வரும் முஸ்லிம்களுக்கு அநீதி ஏற்படுகின்றதா என்பது தொடர்பில் காணி ஆணையாளர் நாயகம் ஊடாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன், மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவில் காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட சிலருக்குக் காணி வழங்கியுள்ளோம். என்றாலும் அம்மக்களுக்கு அளிப்பு உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கவில்லை.

காணி கோரி அரசாங்கத்திடம் விண்ணப்பித்தவர்களில் சிலர் காணி கச்சேரிக்கு வருகை தராமை, 8பேர்ச்சுக்கு குறைந்த காணி விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்பட்டமை, காணி முரண்பாடு இருக்கும் அரச காணிகளில், அந்த முரண்பாடுகள் தீர்க்கப்படாததால், காணி உறுதி வழங்க முடியாமல் போனமையே காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமைக்குக் காரணம் என்றார். (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.10.2025 வெளியிடப்பெற்றது.